# சங்க இலக்கியம் வழி பாதார்த்த குணசிந்தாமணியில் கணலாகும் நீரின் மருத்துவ கண்டுபிடிப்புகளும், புதுமைகளும்

***முனைவர் ஜா. ஸ்டெல்லாமேரி***
உதவிப்பேராசிரியர்
தூயவளனாார் தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி
https://doi.org/10.5281/zenodo.15526575

**ஆய்வுச்சுருக்கம்**
*இலக்கியங்கள் தமிழரின் வாழ்வியலை விளக்குவதோடு மருத்துவ சிந்தனைகளையும் எடுத்துரைக்கும் முன்னோடி அமைந்துள்ளது. நீர் என்பது மனிதனின் அன்றாட தேவைகளில் மிகவும் இன்றியமையாத இடத்தைப்பெற்றுள்ளது. நீர் என்பது இன்றைய மருத்துவ அறிவியல் கண்டுபிடிப்புகளில் முக்கியமான இடத்தைப்பெற்றுள்ளது. இன்று மக்களுக்கு ஏற்படும் பல்வேறுவகையான நோய்களுக்கு முக்கிய காரணம் நீர். நீரின் வழியாகத் தான் மலேரியா, காலரா போன்ற நோய்கள் பரவுகின்றது என்பதை ஆராய்ச்சியில் இன்றய மருத்துவ ஆய்வாளர்கள் விளக்குகின்றனர். நீர் ஓருமனிதனின் உடலில் சரிவிகதப் பங்கு இருந்தால் தான் அவன் ஆராக்கியமாக வாழமுடியும் என்பதைக் குறிக்கும் மருத்துவம் அதை எந்தெந்த காலநிலைக்கு எப்படிப் பயன்படுத்தவேண்டும் என்பதையும் விளக்குகிறது. ஆனால் இன்றைய மருத்துவ ஆய்வாளர்கள் கணித்துக்கூறும் அனைத்துக் கருத்துக்களையும் தமிழர்கள் தங்களின் வாழ்வியலில் கண்டுபிடித்து, கடைப்பிடித்து வாழ்ந்துள்ளனர் என்பதை விளக்குவதாக இக்கட்டுரைஅமைகிறது.*
***கலைச்சொற்கள்:*** *சுனை, அருவி, கூவல், நீர்பிரமேகம், சிலேட்டுமத்தம், பித்தம், வாதம், கபம்*

**முன்னுரை**

*இந்தப் பிரபஞ்சம் நிலம், நீர், காற்று, ஆகாயம், நெருப்பு என்ற பஞ்சபூதங்களால் கட்டமைக்கப்பட்டது. இப்பூமியில் வாழும் ஒவ்வொரு உயிரினமும் உயிர் வாழ மிகவும் தேவையான ஒன்று நீர் ஆகும். நம் உடலுக்கு வளமும், நலமும் சேர்ப்பதில் நீருக்கு இன்றியமையாத இடம் உண்டு. உயிர்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களை உற்பத்தி செய்யும் நீரே, உணவாகவும் பயன்படும் தன்மையுடையது. நாம் உண்கின்ற உணவின் ஆற்றல் இரத்தத்தில் சேர்வதற்கும், உடலில் உள்ள கழிவுப்பொருட்கள் வெளியேறுவதற்கும், இரத்தம் தூய்மை அடைவதற்கும் நீர்த் தேவைப்படுகிறது. இதன் சிறப்பைக் கருதியே “நீரின்றமையா யாக்கை” என்று புறநானூறு கூறுகின்றது. சங்க காலத்தில் வாழ்ந்த மக்கள் அருந்திய நீர் வகைகளையும், அதில் காணலாகும் மருத்துவ குணங்களையும் பிற்காலத்தில் தோன்றிய மருத்துவ நூலான பதார்த்தகுணசிந்தாமணி எடுத்துரைப்பதை இக்கட்டுரை வழிக் காணலாம்.*

**அருவி நீர்**

*குறிஞ்சி நில மக்களின் நீராதாரங்களில் ஒன்று அருவி நீராகும். மலையும், மலைச் சார்ந்த பகுதிகளில் வாழந்த மக்கள் தங்களின் வாழ்வாதாரமாக அருவிநீரைப் பயன்படுத்தியுள்ளனர். அருவி நீரைக் குறித்த*

*பல பாடல்கள் சங்க இலக்கியங்களில் விரவிக்கிடக்கின்றன. சங்க காலத்துக் குறுநில வேந்தனான கோப்பெரு நள்ளி என்பவன் தன்னை நாடிவந்த புலவனுக்குப் பரிசளித்த பாங்கையும், விருந்து வழங்கிய சிறப்புபையும் காணலாம்.*

***தான்னெலி தீயின் விரைவனன் சுட்டு நின்***
***இரும்பேர் ஒக்கலொடு தின்ம எனத் தருதலின்***
***அமிழ்தின் மிசைந்து காய்பசி நீங்கி***
***நல்மரன் நளிய நறுந்தண் சாரல்***
***கல்மிசை அருவி தண்ணெனப் பருவி***

***(புறநானூறு.பா.எ.150)***

*கிழிந்த கந்தலான ஆடையை உடுத்திய புலவனைக் கண்ட நள்ளி, தான் வேட்டையாடிய மானின் கறியை வெண்ணிறப் பதம் வரும்படி இதமாகத் தீக்கடைக்கோலில் தீ மூட்டிச் சுட்டான். அவ்வாறு சமைக்கப்பட்ட மானின் கறியை உண்ணுங்கள் என்று கொடுத்தான். அமிழ்தம் போன்ற அக்கறியை உண்டு மரங்கள் செறிந்த குளிர்ச்சியான மலையில் வீழ்கின்ற அருவி நீரைப் பருகினோம் என்று புறநானுப்பாடல் விளக்குகிறது. அருவி நீர் என்பது இயற்கையில் குளிர்ச்சியுடையது என்பதையும், அதனை அருந்துபவர்களின் உடலின் தன்மைக்கு ஏற்ப அவை நன்மையும், தீமையையும் உண்டாக்கும் என்று பதார்த்தகுண சிந்தாமணி கூறுகிறது.*

***அருவிநீர் மேக மகற்றுங் கபத்தை***
***வருவிக்கும் ரத்தபித்த மாற்றும் - பெருமிதமாம்***
***வேலை யுலகின் மிகுத்தபல முண்டாக்குங்***
***காலைமலர் முகத்தாய் காண்***

***(பதார்த்தகுண சிந்தாமணி.பா.எ.39)***

*அருவி நீரானது நீர்ப்பிரமேகம், இரத்த பித்தம் ஆகியவற்றை உண்டாக்கும். அதேவேளையில் சிலேட்டுமத்தை (உடல் குளிர்ச்சியை) உருவாக்கும், உடல் பலத்தை உண்டாக்கும் என்பதையும் மேற்கண்டப் பாடல் தெளிவுப்படுத்துகிறது.*

## சுனைநீர்

*சுனைநீர் என்பது மலையின் கண் தோன்றும் ஊற்று நீராகும். இது சிறு குளம்போலக் காணப்படும். மலைகளில் வாழ்கின்ற மக்களுக்கும், விலங்குகளுக்கும் இந்த நீரானது நீராதாரமாக அமைந்துள்ளது. இந்தநீர்ப் பார்ப்பதற்குப் பளிங்கு போன்ற நிறத்தில் தெளிவாக இருக்கும் என்பதைச் சங்க இலக்கியங்களில் பல பாடல்களில் காணமுடிகிறது. குறிஞ்சிப்பாட்டில் கபிலர்ச் சுனைநீரைப் பளிங்கு போன்ற நீர்ஊற்று என்பதை கூறுவதைக் காணலாம்.*

***பளிங்குச் சொரிவன்ன பாய்சுனை***

***(குறிஞ்சிப்பாட்டு.பா.எ.57)***

*சுனைநீர் என்பது மலைவாழ்மக்களின் ஆதாரமாக அமைந்தாலும் இதில் உள்ள தீமைகளாக மருத்து கண்டுபிடிப்புகளின் வழி இவை வாதபித்தத்தை உண்டாக்கும் என்றும், மறுநாள் வைத்து அருந்தினால் சூட்டை உண்டாக்கும் என்பதை (பதார்த்தகுண சிந்தாமணி விளக்குகிறது.*

***வாதமொடு பித்தமெழும் வைத்தொருநாட்***
***பின்னுண்ணிற்சீதமில்லை யுட்டினமாஞ் செப்பு***

***(பதார்த்தகுண சிந்தாமணி.பா.டி.31)***

*இந்தச் சுனை நீரினை அருந்தினாலோ, இதில் நீராடினாலோ நடுக்கம், கபவாதம், இருமலுடன் கூடியசுரம் போன்ற நோய்கள் ஏற்படும் என்பதையும்*

***சுனைப் புனலைத் துயத்தார்க்கும் சூழ்ந்த்திற்றோய்ச்***
***தார்க்குங் கனைப்புறுசீ தச்சுரமும் காணும்***
***- வினைக்குரிய வாதமுறு மத்தால் வருமே***
***நடுக்கலின்னும் ஓதுபித்த கோபமுமா முன்னு***

***(பதார்த்தகுண சிந்தாமணி.பா.எ.34)***

*மேற்கண்ட பாடல் தங்களின் மருத்துவ நூலில் எடுத்துரைத்துள்ளதை அறியலாம்.*

## ஆற்றுநீர்

*சங்க இலக்கியத்தில் முல்லை நிலமக்களின் வாழ்வாதாரமாகத் திகழ்ந்த ஆற்றுநீர் இன்றளவும் மனிதர்களுக்கும் ஏனைய உயிரினங்களுக்கும் இன்றியமையாத ஆதாரமாகத் திகழ்ந்து வருகிறது. ஆற்றுநீர், காற்றாற்று வெள்ளமாகவும் மடுவெடுக்கும் என்பது இலக்கியப்பதிவு, அவ்வாறு விரைவாக ஓடிவருகின்ற ஆற்றுநீர் மரம், செடி, கொடிகள்*

என் அடித்துக்கொண்டு வரும்போது அதில் உள்ள மருத்துவத்தையும் தன்னோடு தழுவிக் கொண்டு வருகிறது. இதனை நற்றினையில் தலைவனைப் பிரிந்து தலைவி வருந்தும் காட்சியைக் கண்ட தோழி துன்புவாள். இதனைக் கண்ட அன்னை உயர்ந்த மலையில் நள்ளிரவில் பெய்த மழையால் காட்டில் பெருகிவருகின்ற வெள்ளமானது பூங்கொத்துகளை அடித்துக் கொண்டு வரும். அத்தகைய புதிய நீரானது தலைவியின் நோயைப் போக்கும் என்று எண்ணி அந்த நீரைப் பருகி, நீர் வருகின்ற காட்சியைக் கண்டு மகிழ்ந்து அதில் நீராடி வாருங்கள் என்கிறாள் என்பதை

***வானுற நிவந்த பெரு மலைக் கவா அன்***
***ஆர் கலி வானம் தலைஇ நடுநாள்***
***கனைபெயல் பொழிந்தென கானக் கல்யாற்று***
***முளிஇலை கழித்தன முகிழ் இணரொடு வரும்***
***விருந்தின் தீம் நீர் மருந்தும் ஆகும்***
***தண்ணென உண்டு கண்ணின் நோக்கி***
***முனியாது ஆடப் பெறின் இவள்***
***பனியும் தீர்குவள் செல்க என்றோளே***

***(நற்றிணை, பா.எ.53)***

இப்பாடல் தெளிவுப்படுத்துகிறது.

இதனையே பதார்த்தகுண சிந்தாமணி ஆற்று நீரானது வாதம், கபம், பித்தம் ஆகியவற்றைப் போக்கும் தன்மையுடையது என்றும், உடலில் ஏற்படும் பித்தம் தொடர்பான நோக்களை நீக்கும் தன்மையுடையது என்பதை,

***ஆற்றுநீர் வாத மனலங்க பத்தோடு***
***தோற்றுகின்ற தாகந் தொலைக்குமே - ஊற்றமிகுந்***
***தேகத்தி னோயையெல்லாம் சீறித்து ரத்திவிடும்***
***போசத்திற் தாதுவுமாம் போற்று***

***(பதார்த்தகுண சிந்தாமணி.பா.எ.15)***

தனது மருத்துவக் குறிப்பால் நீரின் தன்மைகளையும், அதன் மருத்துவக் கண்டுபிடிப்புகளையும் எடுத்துரைக்கும் விதத்தை அறியலாம். மேலும் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஆறுகளைப்பற்றிய மருத்துவக் குறிப்புகளை இந்நூலில் காணலாம்.

**கிணற்று நீர்**

சங்க காலத் தமிழர்கள் இயற்கையாக உருவான அருவிநீர், சுனைநீர், ஆற்றுநீர் ஆகியவற்றின் நீரை அருந்தியது போலவே தமது முயற்சியால் உருவாக்கப்பட்ட கிணற்று நீர் (கூவல் நீர்) அருந்தியுள்ளனர். வேளாண்மைக்காகவும், குடிநீருக்காகவும் கிணறுகள் தோண்டியுள்ளனர். கிணறு தோண்டும் போது செம்மண் கலந்த நீர்த் தோன்றியதும், அதைச் சாடியில் ஊற்றி அதனுடன் கடுக்காய்யிட்டுத் தெளிந்த உடன் அந்த நீரைக் குடித்தனர் என்பதைப் புறநானூற்றில் காணலாம்.

***பூவற் படுவிற் கூவல் தோண்டிய***
***வெங்கண் சின்னீர் பெய்த சீறில்***
***முன்றில் இருந்த முதுவாய்ச் சாடி***
***யாம் கடு உண்டென***

***(புறநானூறு, பா.எ.319)***

மேலும் முல்லை நிலத்தில் வாழ்ந்த மடிவாய்க் கோவலர்களும் வன்மையான நிலத்தைத் தோண்டி தங்களின் வாழ்வாதாரத்திற்குப் பயன்படுத்தியுள்ளனர் என்பதை (அகநானூறு, பா.எ.21) விளக்குகிறது. அதே போல மருதநிலத்தில் வாழ்ந்த மக்கள் கிணறுத் தோண்டும்போது அதில் உள்ள கற்களை உடைத்து அதிலிருந்து வெளிப்பட்ட உப்பு நீரைக் குடித்தனர் என்பதை (புறநானூறு, பா.எ.331) விளக்குகிறது. சங்க கால மக்கள் கிணற்று நீரைத் தங்களின் அன்றாடவாழ்வில் பின்பற்றி வந்ததை பாடல்கள் வழியாக அறியலாம்.

இந்தக் கிணற்று நீரைத் தொடர்ந்து குடிப்பதால் ஏற்படும் பிரச்சனைகளாகப் பதார்த்தகுண சிந்தாமணி சில மருத்துவக் கண்டுபிடிப்புகளைக் கூறுகிறது. அவை

***ஆசாரக் கூபத் தறலா லதிதாகம்***
***வீசாகச் சூடுபசி மெய்க்காந்தல் - மாசூலை***
***மெய்யுள்வலி சந்துளைப்பு வீழ்மயக்கஞ் சோபைபித்தம்***
***பையவரு மீளையறும் பார்***

***(பதார்த்தகுண சிந்தாமணி.பா.எ.33)***

அதிகத் தாகம், வெப்பம், பசி, சூலை, உடல் கடுப்பு, இடுப்பு வலி, மயக்கம், சோபை

*பித்தம் ஆகியவற்றை உண்டாக்கு என்பதை மேற்கண்ட பாடல் வழி விளக்குகிறது.*

**முடிவுரை**

*தமிழ் மக்கள் இயற்கையோடு இயைந்த வாழ்வு வாழ்ந்துள்ளனர் என்பதை இலக்கியங்கள் மிகத் தெளிவாகப் புலப்படுத்துகின்றது. இன்றைய அறிவியல் மருத்துவர்கள் கண்டுபிடிக்கும் கண்டுபிடிப்புகளும், ஆராய்ச்சிகளும் நம் முன்னோர்கள் ஏற்கனவே கண்டுஅறிந்ததே என்பதை இதன் வழி மறுக்க இயலாது. இன்றைய மருத்துவ ஆய்வாளர்கள் பல்வேறு ஆய்வுகளங்கள் அமைத்து ஆராய்ச்சிகள் செய்து சாதனைப்படைப்பதற்கு முழுமுதற் காரணம் நம் தமிழ்ர்களின் மதிநுட்பமே என்பதை இதன் வழி உறுதிசெய்யப்படுகிறது.*

**துணைநின்ற நூல்கள்**


1. *பதார்த்தகுண சிந்தாமணி, இந்திய மருத்துவம் - ஓமியோபதித்துறை, சென்னை - 2007.*
2. *துரைசாமிப்பிள்ளை. ஔவை. சு.(உ.ஆ), நற்றிணை, பூம்புகார் பதிப்பகம், செ ன்னை - 2010.*
3. *கதிர்முருகு (உ.ஆ), பத்துப்பாட்டு, சாரதாபதிப்பகம், சென்னை, 2009.*
4. *தட்சிணாமூர்த்தி.அ. தமிழ்ர் நாகரிகமும் பண்பாடும், ஐந்திணைப்பதிப்பகம், சென்னை. 2021.*
5. *பாலசுப்பிரமணியன். கு.வே. அகநானூறு, மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2004*
6. *புலியூர்கேசிகள் உரை, எட்டுத் தொகையும், பத்துப்பாட்டும், ஸ்ரீ செண்பகா பதிப்பகம், சென்னை, 2020.*